ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

तदूज्ञानं प्रशमकरं यदिन्द्रियाणां तद्ज्ञेयं यदुपनिषत्सु निश्चितार्थम् ।
ते धन्या भुवि परमार्थनिश्चितेहा: शेषास्तु भ्रमनिलये परिभ्रमन्त: ॥

धन्याष्टकम् ।

தத்ஜ்ஞாநம் ப்ரஶமகரம் யதிந்த்ரியாணாம் தத்ஜ்ஞேயம் யதுபநிஷத்ஸு நிஶ்சிதார்த்தம் । தே தந்யா புவி பரமார்த்தநிஶ்சிதேஹா: ஶேஷாஸ்து ப்ரமநிலயே பரிப்ரமந்த: ।

ஞானேந்திரியம் 'கர்மேந்திரியம் மனம் என்று சொல்லப்பட்ட இந்தஇந்திரியங்களுக்கு எதானது அடக்கத்தை அதாவது அந்தந்த இந்திரியங்களையும் தம்மிஷ்டப்படி கெட்டவழிகளில் செல்லவிடாமல் தடுத்து சாஸ்திரீய மார்க்கங்களில் பிரவேசிக்கும்படி செய்கின்றதோ அதற்குத்தான் ஞானம் என்று பெயர். எது வேதங்களுக்குள் ஸாரமாய் விளங்கும் உபநிடதங்களால் தீர்மானமாய் அறிவிக்கப்படுகின்றதோ அந்த வஸ்துதான் அறியவேண்டிய வஸ்து. உலகில் பல வஸ்துக்கள் தோன்றினாலும் அவைகளுக்குள் அநாத்ம வஸ்துக்களை விளக்கி நித்யமாய் பிரகாசிக்கும் பரமாத்மஸ்வரூபத்தை அறிந்து அதையே எப்பொழுதும் எவர்கள் விரும்பிக்கொண்டிருக்கிறார்களோ, அவ்வித மஹான்களே தன்யர்களாகிறார்கள். மற்றுமுள்ள அனைவரும் நிலையற்றதான அநித்யவஸ்துக்களில் மோஹங்கொண்டு வீணில் சுற்றுகிறார்கள்.

ஜன்மாவைப்பெற்ற ஒருமனிதன் முதலாவது தன் இந்திரியங்களைக் கெட்டவழிகளில் விடாமல் ஸ்வாதீனம்செய்துகொள்ள வேண்டும், இரண்டாவது உபநிஷத்தின் ஸாரமான பொருளாய் விளங்கும் ஆத்மதத்வத்தைப் பெற முயற்சிக்கவேண்டும். மூன்றாவது அவ்விதம் முயற்சித்து அறியப்பட்ட பரவஸ்துவிலேயே தம் சித்தத்தை நாடியிருக்கும்படி செய்யவேண்டும். இம்மூன்றையும் முறையே கைவிடாமல் அனுஷ்டிப்போர்கள் மிகவும் சிரேயஸ்ஸைப் பெறுவார்கள் என்று போதிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

# ஹரிஹராபேதம்.

(483-வது பக்கத்தொடர்ச்சி)

ब्रह्मविष्णुमहेशानां भेदःकुत्रापिनप्रभो ।
कर्तारोह्यस्य लोकानां सृष्टिस्थिति लयेषुच ॥

ப்ரஹ்மவிஷ்ணுமஹேசாநாம் பேத: குத்ராபிநப்ரபோ ।
கர்தாரோஹ்யஸ்ய லோகாநாம் ஸ்ருஷ்டிஸ்திதிலயேஷுச ॥

பிர்ம்மா விஷ்ணு மஹேச்வரன் இம்மூன்று பேர்களும் உலகங்களின் உற்பத்தி பாலனம் ஸம்ஹாரம் என்கிற கர்மாக்களைச் செய்கிறவர்களாகையால் அவர்களுக்குள் ஒரு ஸமயத்திலும் மேல்கீழ் என்கிற வித்தியாஸம் பாராட்டமுடியாது. பின்னும்,

त्वयादृष्टः पुराकृष्णो लोकनाथो जगन्मयः ।
कैलासयात्रा मकरोत्पुत्रार्थं भरतर्षभ ॥
तत्राराध्यचिरं कालं भूतनाथमुमापतिम् ।
ईप्सितं प्राप्तवान्पुत्रं तस्माद्भेदो न विद्यते ॥

த்வயாத்ருஷ்ட: புராக்ருஷ்ணோ லோகநாதோ ஜகந்மய: ।
கைலாஸயாத்ராமகரோத்புத்ரார்தம் பரதர்ஷப ॥
தத்ராராத்யசிரம் காலம் பூதநாதமுமாபதிம் ।
ஈப்ஸிதம் ப்ராப்தவாந்புத்ரம் தஸ்மாத்பேதோ ந வித்யதே ॥

ஹே பரதர்ஷப பரதவம்சத்தரசர்களுக்குள் மிகச் சிறந்தவரான யுதிஷ்டிரரே, ஸர்வலோகத்திற்கும் அதிபதியாயும் ஜகத்ஸ்வரூபியாய் விளங்குகிறவரும் உம்மால் முன் பார்க்கப்பட்டவருமான ஸ்ரீகிருஷ்ணபகவான் தமக்குப் புத்திரன் வேண்டுமென்று கைலாஸத்திற்கு யாத்திரைசெய்தார். அங்கு சென்று பூதபதியாயும்

உமாகாந்தராயும் விளங்கும் ஸ்ரீபரமேச்வரரை வெகுகாலம் ஆராதித்துத் தமது இஷ்டமான புத்திரனையடைந்தார். ஆகையால் இவ்விருவருக்குள் பேதம்கிடையாது.

शङ्करोविष्णुमव्यक्तं विष्णुमाराध्य भक्तितः ।
षण्मुखं प्राप्तवान्पुत्रं देवतार्थमरिन्दमम् ॥

ஶங்கரோவிஷ்ணுமவ்யக்தம் விஷ்ணுமாராத்ய பக்தித: ।
ஷண்முகம் ப்ராப்தவாந்புத்ரம் தேவதார்த்தமரிந்தமம் ॥

எங்கும் வியாபகராயும் அவ்யக்தராயும் பிரகாசிக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஸ்ரீசங்கரரானவர் பக்தியுடன் ஆராதித்து தேவதைகளுக்காகச் சத்ருவை ஜயிக்கக்கூடிய பலவானான சுப்பிரமணியன் என்கிற புத்திரனை அடைந்தார்.

ब्रह्माच जनयामास विष्णुमाराध्य भक्तितः ।
लोकान्प्रजापतीन्सर्वान् तस्माद्भेदो नविद्यते ॥

ப்ரஹ்மாச ஜநயாமாஸ விஷ்ணுமாராத்ய பக்தித: ।
லோகாந்ப்ரஜாபதீந்ஸர்வாந் தஸ்மாத்பேதோ ந வித்யதே ॥

பிர்ம்மாவும் பக்தியுடன் ஸ்ரீமஹாவிஷ்ணுவையே ஆராதித்து லோகங்களையும் ஸகலப் பிரஜாபதிகளையும் சிருஷ்டித்தார். ஆகையால் இவர்களுக்குள் உயர்வு தாழ்வென்கிற பேதமே கிடையாது திருமூர்த்திகளும் ஒன்றுதான். பேதமில்லை என்பதற்கு முன் நடந்ததாயும் செவியுறுவோர்களுடைய பாபங்களைப் போக்குகின்றதாயும் சரீராரோக்யம் ஆயுள்விருத்தி இவைகளை உண்டுபண்ணுகிறதுமான ஒரு இதிஹாஸமுண்டு. அதை அடியில்வருமாறு காண்க.

ஹே ராஜன் அரசனான யுதிஷ்டிரரே முன் கிருதயுகத்தில் வேத வேதாங்கங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் மிகவும் பாண்டித்யம் பெற்றவரும் ஜிதேந்திரியரும் சாந்தஸ்வபாவமுள்ளவரும் எப்பொழுதும் பகவத்யானம் செய்பவருமான ஸுசாந்தர் எனப் பெயர்வாய்ந்த ஒரு த்விஜர் இருந்தார். அந்த த்விஜ சிரேஷ்டர் கிருகஸ்தாச்ரமத்தில் அனுபவிக்கவேண்டியதான ஸகலவிதமான போகங்களையும் அனுபவித்து அதில் வெறுப்படைந்து மோக்ஷத்தையடையவேண்டுமென்ற விருப்பங்கொண்டு அதற்குற்ற நியமத்தோடுகூட பிரும்மதத்தன் என்ற அரசனால் ரக்ஷிக்கப்பட்ட கிஷ்கிந்தையை அடைந்தார். அந்நகரில் விளங்கும்

பம்பாஸரஸ்ஸில் ஸ்நானம்செய்து ஸ்ரீபரமேசுவரனை அர்சித்துத் தவம்புரியவேண்டுமென்ற அவாவுடன் சிவத்யானம் செய்துகொண்டு அங்கு வஸித்துவந்தார். அவ்வேதியர் ஒவ்வொரு தினமும் மூன்று நேத்திரங்களைத் தரிப்பவரும், நாசமற்றவரும், காலனை ஜயித்தவரும் கஜாசுரனை வதம்செய்து அந்தத் தோலை வஸ்திரமாக உடையவரும் ஆயிரம் நேத்திரங்களோடு கூடியவரும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்கிற இம்மூன்று காரியங்களைச் செய்பவரும் நீரற்றமேகம்போன்ற மேனியையுடையவரும் சூலபாணியாயும் விளங்கும் ஸ்ரீமஹாதேவரைத் திரியம்பகம் என்கிற மஹாமந்திரம் ருத்ரஸூக்தம் முதலிய வேதமந்திரங்களால் அபிஷேகம்செய்து ஜாதி முதலிய நல்ல புஷ்பங்களால் நன்குபூஜித்து எப்பொழுதும் அவரையே தியானித்துக் கந்தமூலங்களையே ஆஹாரமாகக்கொண்டு காலம் கழித்துவந்தார். (தொடரும்)

உபபத்திராதிபர்.

---

## உபாகர்மாவில் ஆசார்ய பக்தி
### (நெரிஞ்சிப்பேட்டை.)

(495-வது பக்கத்தொடர்ச்சி)

வைத்தியநாததீக்ஷிதீய தர்மசாஸ்திர நிபந்தன க்ரந்தத்தைப் பிரமாணமாகக்கொண்ட நாம் சதுர்தசி வேதையையும் அதனால் ஏற்படுமென்று சொல்லப்படுகிற தோஷத்தையும் கவனிக்கவேண்டியதில்லையென்ற தீர்மானத்துடன் ஆடி-மீ 28வ காலை ஸ்னான ஸந்தியாவந்தனாத்யனுஷ்டானங்களையும் காமோகாரிஷி ஜபத்தையும் முடித்துக்கொண்டு ராகுகாலத்திற்கு முன்னதாக 10 மணிக்கே புறப்பட்டு மஹாநதியானகாவேரிதீரம்போய் ஸாவகாசமாக மாத்யாஹ்னிகமும் ப்ரும்மயக்ஞமும் அனுஷ்டிக்கப்பட்டது. காலமோ மப்பும் மந்தாரமுமாயிருந்தது. மாருதமோ மனதிற்கிசைந்ததாயிருந்தது. மஹாநதியோ மஹாபாபங்களையுங்கூட பஸ்மஞ்செய்வேன், என்று சொல்வதுபோல உத்கோஷத்துடன் விருத்தியடைந்துகொண்டிருந்தது இந்த சமயத்தில் மஹாஸங்கல்ப புரஸ்ஸரம் மஹாநதீஸ்னானமும் காண்டரிஷிதர்ப்பண ஹவனங்களும் வேதாரம்பமும் செய்யப்பட்டு கர்மாவஸானத்தில் ஸ்ரீவியாஸப்ரஸாதமும் பக்திபுரஸ்ஸரம் ஸ்வீகரிக்கப்பட்டது.

அந்த ஸமயம் இவ்வூர் ஸ்ரீ தர்ம சிவாசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஏஜண்டு ஸ்ரீநிவாஸய்யங்காரால் ப்ரேரேபிக்கப்பட்டு இவ்வூர் மணியம் வெங்கடராமய்யரால் அங்கீகரிக்கப்பட்டு இதர ஜனங்களுடைய ஆமோதத்தின்பேரில் பிரும்மஸ்ரீ N. K. வெங்கடரமணசாஸ்திரிகளால் ஓர் உபன்யாஸம் செய்யப்பட்டது. அதன் ஸாராம்சம் பின்வருமாறு.

"ஹே மஹா ஜனங்களே! ஸ்ரீமதாசார்யானுக்கிரஹத்தின் பேரில் நமக்குக் கிடைத்த ஆக்ஞாபத்திரிகையை அனுஸரித்து ஸுஸமயத்தில் இவ்வுபாகர்மாவைச்செய்து ஸ்ரீமதாசார்யாளுடைய அனுக்ரஹத்திற்கும் வேதவியாஸானுக்ரஹத்திற்கும் பாத்திராளாவோமென்பதற்சய்யமில்லை. ஸ்ரீமதாசார்யஸ்வாமிகளின் விஜயயாத்திரை முகாமானது சாதுர்மாஸ்யத்தை உத்தேசித்து உலகக்கோட்டுக்கு ஸமீபமாயுள்ள கஞ்சிக்கோட்டில் ஒருமாதகாலமாக இருந்துவருகிறது. இன்னும் ஒருமாதம் அவ்விடமே இருக்கவேண்டும். சாதுர்மாஸ்யமென்பது

माधवश्चतुरो मासान् सर्वभूतहितायवै ।
स्वापं यास्यति शेषाङ्के लक्ष्म्यासह जगत्पतिः ॥
सुप्तश्चैवोत्थितो यावन्नभवेत् स सनातनः ।
अहं तावन्निवत्स्यामि सर्वभूतहितायवै ॥
आषाढादि चतुर्मासं कार्तिकान्तं तु संविशेत् ।

மாதவஶ்சதுரோ மாஸாந் ஸர்வபூதஹிதாயவை ।
ஸ்வாபம் யாஸ்யதி ஶேஷாங்கே லக்ஷ்ம்யாஸஹ ஜகத்பதி: ॥
ஸுப்தஶ்சைவோத்திதோ யாவந்நபவேத் ஸ ஸநாதந: ।
அஹம் தாவந்நிவத்ஸ்யாமி ஸர்வபூதஹிதாயவை ॥
ஆஷாடாதி சதுர்மாஸம் கார்த்திகாந்தம் து ஸம்விஶேத் ॥

"லக்ஷ்மீபதியாயும் ஜகத்பதியாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் ஸகலப்ராணிகளுடைய க்ஷேமத்தின்பொருட்டு சேஷசயனத்தில் நித்திரைசெய்வார்.

எவ்வளவு காலம்வரை ஜகத்காரணபூதரான அந்த பகவான் நித்திரையிலிருந்து எழுந்திருப்பதில்லையோ அவ்வளவுகாலம் நான் ஸகலபிராணிகளுடைய க்ஷேமத்தின்பொருட்டு ஓரேஇடத்தில் நிவஸிக்கப்போகிறேன்" என்று ஸங்கல்பித்துக்கொண்டு ஆஷாட

சுத்தம்முதல் கார்த்திகை சுத்தம்வரையில் நான்குமாத காலம் "वर्षासु ध्रुवशीलः" வர்ஷாஸு த்ருவசீல: வர்ஷாகாலத்தில் ஒரே இடத்தில் வஸிக்கும் ஸ்வபாவமுள்ளவனுயிருக்கவேண்டும்" என்றசுருதி வாக்யத்தின்படி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும்" என்று ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட நான்கு மாதகாலமே யாகும். ஆனால்

चतुरोयं वसेन्मासान् वार्षिकान् द्वावथापिवा ।

சதுரோயம் வஸேந்மாஸாந் வார்ஷிகாந் த்வாவதாபிவா ।

வர்ஷாகாலங்களான நான்குமாதம் வஸிக்கவேண்டும். ஸௌகர்ய மில்லாவிட்டால் இரண்டுமாத காலமாவது வஸிக்கவேண்டும்" என்ற பிரமாணத்தால் அனேகமாக இரண்டுமாத காலமேதான் ஸங்கல்பிக்கப்பட்டு வருகிறது,

ब्रह्मिष्ठः परमोहंसः साक्षान्नारायणः स्मृतः ।

ப்ரஹ்மிஷ்ட: பரமோஹம்ஸ: ஸாக்ஷாந்நாராயண: ஸ்ம்ருத: ।

அகண்டாகார விருத்தியையுடைய பரமஹம்ஸாச்ரமீ ஸாக்ஷாத் விஷ்ணுவேதான் என்ற ப்ரமாணங்களால் ஸன்யாஸிகளிடத்தில் எப்பொழுதும் ஸ்ரீமந்நாராயண பாவனையே இருக்கவேண்டும். வந்தனகாலத்திலும் "ओन्नमोनारायणाय" ஓம் நமோ நாராயணாய என்ற அஷ்டாக்ஷரமந்திரத்யானத்துடன் வந்தனம் செய்யவேண்டுமென்றும் ஏற்படுகிறது. ஆனதால் விஷ்ணுஸ்வரூபிகளான யதிகள் இந்த சாதுர்மாஸ்ய விருதத்தை தள்ளக்கூடாதென்று ஏற்படுகிறது.

आषाढ्यां पौर्णमास्यां तु कारयेद्वपनं यतिः ।

ஆஷாட்யாம் பௌர்ணமாஸ்யாம் து காரயேத்வபநம் யதி: ।

என்ற வசனப்படி ஆஷாடபௌர்ணமியில் க்ஷௌரம் செய்து கொண்டு

देवं कृष्णं मुनिं व्यासं भाष्यकारं गुरोर्गुरुम् ।

தேவம் க்ருஷ்ணம் முநிம் வ்யாஸம் பாஷ்யகாரம் குரோர்குரும் ।

என்ற வசனங்களின்படி அன்று அத்வைத ஸம்ப்ரதாய ப்ரவர்த்தக பரம்பரையில் முதலாவதாக கணனம் செய்யப்பட்ட ஸ்ரீமந் நாராயணமூர்த்தியையும் உத்தா மீமாம்ஸா ஸூத்ரத்தைச் செய்த ஸ்ரீவியாஸமஹரிஷியையும் அத்வைத பாஷ்யத்தைச்செய்த ஆதி

5007



சங்கர பகவத்பாதாசார்யாளையும் குருவின் குருவையும் மற்றும் தன் குரு கணபதி துர்கை ஸரஸ்வதீ ஸநகாதிகள் ஹஸ்தாமலகர் தோடகர் பத்மபாதர் ஸுரேசுவரர் முதலானவர்களையும் யதோக்தமாகப் பூஜித்துவிட்டு அன்றுமுதல் வேதாந்தவிசாரம் செய்ய வேண்டுமென்றும் தெரியவருகிறது.

இந்த சாதுர்மாஸ்யத்தை உத்தேசித்துத்தான் கஞ்சிக்கோட்டில் இன்னும ஒருமாதம் தங்கவேண்டியிருக்குமென்று முன் சொல்லப்பட்டது.

நமது குருமூர்த்தியானவர் ஸன்யாஸாச்ரமம் பூண்டும் மாடாபத்யம் வஹிக்க நேர்ந்ததால் ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யாளின் ஆக்ஞைக்கிணங்கி ஆஸேது ஹிமாசலம் விஜயம்செய்து ஆங்காங்கு ஸதுபதேசங்களைச் செய்துகொண்டு ஜனங்களைத் தர்மமார்க்க ப்ரவர்த்தகாளாக்கி நம் வைதிகமதஸம்ரக்ஷணரூபமான கைங்கர்யத்தில் விசேஷ சிரத்தைகொண்டு விளங்கிவருகிறார் என்பது ஆபாலகோபம் ஸுப்ரஸித்தமானதே. இப்படி நமது க்ஷேமத்தைக்கோரி செய்யப்பட்டுவரும் பூஜை, பிராம்மணஸந்தர்பணம் முதலான கைங்கர்யங்களுக்கு நமது திரவியமே ஸாதனமாயிருந்தாலல்லவா நாம் பூர்த்தியான பலனை அடையமுடியும்? தவிர மற்ற காலங்களிலாவது ஊருக்கு ஒருநாள் இரண்டுநாளாக ஆங்காங்கு உள்ளவர்களின் ஸௌகர்யத்தையும் எதிர்பார்த்து தங்கிப் போகிறார்கள். அச்சமயம் ஆங்காங்கு இருப்பவர்களே ஸ்ரீமடத்தின் கைங்கர்யத்தைக் கவனிக்க ஸுலபமாயிருக்கும். இந்த சாதுர்மாஸ்ய ஸமயம் ஓரேயிடத்தில் தங்கவேண்டியிருப்பதால் ஸ்ரீ மடத்தின் நிர்வாஹத்தைப் பூர்த்தியாகக் கவனிப்பது அவ்வூர் வாஸிகளுக்கு அவ்வளவு ஸுலபமாக இருக்கமுடியாது. ஆனதால் நாம் பிரதிவருஷமும் சிராவண ஸமயம் ஒவ்வொரு கிராமத்திலேயும் அவரவர்கள் பக்திக்கும் சக்திக்கும் இயன்றவரை திரவ்யசேகரம்செய்து அனுப்புவோமானால் "சிறு துளி பெரு வெள்ளம்" என்ற நியாயமாய் ஏராளமான தொகைசேர்ந்து அக்காலத்தில் நடக்கும் வித்வத்ஸபைக்கும் பூஜாதி கைங்கரியங்களுக்கும் போதுமானதாகவே ஏற்படும். தவிர நமது பிராம்மண ஸமூஹமானது இந்த சிராவண ஸமயத்தில் ஒன்றுசேருவதாலும் இது ஓர் புண்யதினமானதாலும் ஸ்ரீவியாஸபகவானை அர்சித்து வேதத்தை உபக்ரமித்து அவரது ப்ரஸாதத்தை அடையவேண்

டிய ஸமயமானதாலும் ஸ்ரீவியாஸபூஜையை அங்கமாயுடைய இந்த சாதுர்மாஸ்ய கைங்கர்யத்திற்கும் கொஞ்சம் உதவி செய்து ஸ்ரீவேதவியாஸாநுக்கிரஹத்திற்கும் ஸ்ரீமதாசார்யகிருபைக்கும் பாத்திராளாகவேண்டுவது ஒவ்வொரு கிராமத்தாருக்கும் உசிதமானதே.

தவிர நமது கிராமத்திற்கு ஸ்ரீமதாசார்யஸன்னிதானத்திலிருந்து அனுப்பப்பட்ட வியாஸபூஜாமஹோத்ஸவப் பத்திரிகையையனுஸரித்து நாம் நேரில்போய்த்தர்சிப்பது அவ்சியமாயிருந்தபோதிலும் நமக்கிருக்கும் ஸந்தர்ப்பங்களை உத்தேசித்து இந்த சாதுர்மாஸ்யகாலத்தில் திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராதி தேவதைகளுடைய ஓர் தினத்திய அபிஷேகத்திற்காவது உதவும்படி கொஞ்சம் திரவியம் சேர்த்தனுப்பி ஸ்ரீமதாசார்யாளின் பூர்ணாநுக்ரஹத்திற்கும் வேதவியாஸாநுக்கிரகத்திற்கும் பாத்திராளாகவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்,

இவ்விதமாக உபன்யாஸம் முடிந்தவுடன் சிறிய கிராமமானதால் அடியிற்கண்ட விவரப்படி சொல்பதுகைவசூலிக்கப்பட்டது தர்மசிவாசார்யஸ்வாமிகள் மடம் ஏஜண்டு ஸ்ரீநிவாஸய்யங்கார் ரூ. 2 கொப்பம்பட்டி வெங்கடராமய்யர் ரூ. 2 மணியம் வெங்கடராமய்யர் ரூ. 2 ஸாமவேதி வெங்கடரமணய்யர் ரூ. 2 சேஷய்யங்கார் ரூ. 2 கோயம்புத்தூர் சுப்பராவ் ரூ. 2 வெங்கடரமண சாஸ்திரிகள் ரூ. 1 குப்புஸாமி அய்யர் ரூ. 1 சுப்புதீக்ஷிதர் ரூ 1 சுப்பிரமணியக் குருக்கள் ரூ. 1 அம்மாப்பேட்டை கர்ணம் வெங்கட்டய்யா ரூ. 1 ஆக ரூ. 17. இந்தத் தொகையை விக்ஞாபன பத்திரிகையுடன் ஸன்னிதானத்திற்கு அனுப்பப்பட்டது.

"நாம் சேகரித்தது ஸ்வல்பதொகையேயானாலும் இதுபோல் ஒவ்வொரு கிராமத்திலும் நடத்தப்படுமேயானால்காரியஸித்திக்கு யாதொரு தடையுமில்லை. ஆனதால் ஸகல ஆஸ்திகர்களும் தெரிந்துகொள்ளும்படி இவ்விஷயத்தை நமது 'ஆர்யதர்ம' பத்திரிகை மூலமாக வெளியிடவேண்டும். இவ்விதமே பிரதிவருஷமும் உபாகர்மாவில் ஆசார்யபக்தி காட்டப்படவேண்டும்" என்ற ஸ்ரீநிவாஸய்யங்கார் கோரிக்கையை ஸகலமானவர்களும் அங்கீகரித்து ஆனந்தித்தார்கள். பிறகு வழக்கம்போல் ஸ்வஸ்திவாசனபுரஸ்ஸரம் ஸ்வாமிதர்சனஞ் செய்துகொண்டு கிருஹத்தையடைந்தார்கள். சுபம்,

மஹாராஜனுக்ஞாவசம்வதன்,

என். கே. வெங்கட்டரமண சாஸ்திரிகள்.

## பொறுமை.

பொறுமை — பொறுத்துக்கொள்ளும் தன்மை. இது மன்னித்தல், சகித்தல், பொறை, என்ற வேறு பெயர்களாலும் வழங்கப்படும்.

பொறுத்துக்கொள்ளல் என்பது எதைப்பொறுத்துக்கொள்வது? எப்படிப் பொறுத்துக்கொள்வது? எவர் பொறுத்துக்கொள்ளவேண்டும்? ஏன் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்பன போன்ற வினாக்களைப் பற்றி ஆராயுமாறு தூண்டுவதாகும்.

பிறர் தம்பொருட்டுச் செய்த பிழையை ஒவ்வொருவரும் பொறுத்துக்கொள்ளவேண்டும். பிழை வரம்புகடந்த செயல். இப்பிழை பலதிறப்படும். இல்லாததை உள்ளதாகவும், உள்ளதை இல்லாததாகவும், செய்யாததைச் செய்ததாகவும், செய்ததைச் செய்யாததாகவும், சொல்லியதைச் சொல்லாததாகவும், சொல்லாததைச் சொல்லியதாகவும் சொல்லுவனவும் இவைபோன்ற பிறவும் ஒருவர் பிறர்பொருட்டுச் செய்யும் பிழைகளாம்.

மன்னிக்கும் குணத்தை வளர்த்துக்கொள்வதால் பொறுத்துக்கொள்ள இயலும். பொறுமைகுணத்தைப் பழக்கிக்கொள்ள முயல்வோர் "மக்களது குணம், செயல் முதலியனமுக்குணவசத்தால் மாறிமாறி வருதல் இயல்பே. அம்முறையில் குணம்கெட்டமையால் இவர் நம்மை இங்ஙனம் பழிக்கநேர்ந்ததுபோலும். இதுவும் நமது நல்லகாலத்தின் பயனே. அறிவுடையோர் 'தம்மைப் பழிக்கும் பிறர் தமது பாபத்தின் பயனையும் தம்மைப் புகழும் பிறர் தனது புண்ணியததின் பயனையும் பெற்றுக்கொண்டவராகின்றனர். அதனால் தமக்கு இருள்சேர் இருவினைகளால் வரும் துன்பங்கள் நீங்குகின்றன' என்று எண்ணி மகிழ்ந்திருக்கின்றனரே. இதனால் விளங்குவது யாது? பிறர் தம்பொருட்டுச் செய்யும் பிழைகளைப் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்பது அல்லவா? அன்றியும் மேலோர் தம்பொருட்டுப் பிறர்செய்யும் பிழைகளைத் தாம் பொறுத்துக்கொள்வது மாத்திரம் அன்றி ஆண்டவனே, அறியாமையாலோ அறைப்பாவத்தாலோ இவர் எம்பொருட்டுப் பிழைகளைச் செய்துவிட்டார். தயைசெய்து அப்பிழைகளுக்காம் தீயபயனை அளிக்காது அவரை மன்னித்தருள்க' என்று வேண்டிக்கொள்ளவும் செய்கின்றனரே. மக்களாவார்க்கு உணவாக நின்று உயிரையும் உடலையும் காத்துவரும் நெல்லுடன்

உமி இருக்கவில்லையா? நீருடன் நுரை இருக்கவில்லையா? நறுமண மலரில் நாறுத்தகடை இருக்கவில்லையா? அவற்றால் நெல், நீர், நறுமலர் ஆகியவற்றை விலக்கிவிடுகிறோமா? இல்லையே. ஆதலின் குறையில்லாது பிறர்க்குப் பிழையில்லாது இருப்பது மக்களுள் அருமையானதே" என்று தீர ஆராய்ந்தறிவதால் பொறுத்துக் கொள்ளுதல் என்னும் மன்னிக்கும் குணம் வளர்ச்சியுறும்.

இனி "எதற்கும் ஒருவரையறை உண்டு. அங்ஙனமே தான் இந்த மன்னித்தலுக்கும். ஒருவன் பெரியாரிடம் யாண்டும் பிழையையே செய்துகொண்டிருக்கிறான் என்றுவைத்துக்கொள்வோம். அக்கால் அப்பெரியார் செய்யத்தக்கது யாது? அவரும் மனிதர் தாமே. ஏன் அவரும் மனம் வேறுபட்டு இவனிடம் பிழைசெய்தலாகாது? ஒருகால் செய்யநேர்ந்தாலும் நேரலாமே" என்று வினா எழலாம்.

எழினும் என்? பொறுமையில் பழகுவோர் பிறர்செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். அங்ஙனமின்றி இவரும் பிழைசெய்யக் கருதுவாராயின் அது "கருநரைமேல் சூடேபோல் தோன்றி"விடும். 'இவர் என்ன தவறாது நடந்து கொண்டவரோ? இவரும் அவன்மாட்டுப் பிழைசெய்தவர் தாமே" என்ற அழியாத பழிச்சொல்லுக்கும் அப்பொறுமையாளரை உள்ளாக்கிவிடும்.

ஆதலின், பொறுக்கும் பெரியோர் "இவனிடம் பழக்கம் உண்டானமையினால் அல்லவா நமக்கு இவ்வளவு தொல்லைகள் உண்டாகநேர்ந்தது. இனி, இவனது தொடர்பு இருத்தல்கூடாது" என்று ஓர்ந்து அவனைவிட்டு விலகல்வேண்டும். சிறிதும் புறம் பழிக்காமலும், தூற்றாமலும் இருத்தல்வேண்டும். இவையே பொறுமையிற் பழகுவோர் கைக்கொள்ளவேண்டியன. இங்ஙனமும் முயன்றால் தவறாது பொறுமையாளர் ஆகலாம்.

உலகத்தில் நல்லது கெட்டது, விருப்பு வெறுப்பு, புண்ணியம் பாவம், இன்பம் துன்பம், விடுகட்டு என்ற இரட்டைகள் வழங்கி வருகின்றன. இவற்றுள் முதலில் இருப்பவற்றை எண்ணி அடையவிரும்புபவரே பிறர்செய்யும் பிழைகளைப் பொறுக்கும் வலிமையினைப் பெற்றவராவார்.

இதனால் 'எளியோர் பொறுமையாளராக இருத்தல்கூடாது' என்பது கருத்தாகாது. ஆறறிவுபடைத்த மக்களாய்ப் பிறந்தார்

ஒவ்வொருவரும் பொறுமையாளராக இருக்கவேண்டியதே. அனைவரும் பொறுமையாளராவதற்குத் துணைசெய்யவே இவ்வனம் கூறப்பட்டது.

இவ்வாறு உணர்ந்து பொறுத்தவரே நல்லவர்; புண்ணியர்; இன்புறுவோர்; வீடடைவோர். "பிறர்செய்த பிழைகளைப்பொறுத்து மன்னித்து மறக்கவே ஆறறிவினையுடைய மக்கட்பிறப்பிற் படைக்கப்பட்டுளேன். அதற்குற்ற அறிவு ஆற்றல்களைக் கொடுத்தருள்வாயாக" என்று ஆண்டவனைக்குறித்து வேண்டிப் பொறுமைக்குணத்தை வளர்த்துக்கொள்வதே மாந்தர்கடமையாம்.

இங்ஙனம் அறிந்து பொறுப்பவரே விருப்பு வெறுப்பின்றி இன்பமாய் வாழ்பவர்; அனைவராலும் புகழப்பெறுபவர்; எல்லா நலன்களை ஒருசேரப் பெறுதற்குறியவர்.

நமது நாட்டில் முற்காலத்தில் பாண்டவர், கௌரவர் என்ற இருவகையினர் இருந்தனர். இருதிறத்தினரும் தாயபாகத்திற் குரியவர். இவர்களுள் பாண்டவர் ஐவர்; ஆனல் மிக்க வன்மை வாய்ந்தவர்; உண்மையாளர்; கபடற்றவர்; பொறுமையாளர். கௌரவர் நூறுபேர்; வன்மையாளர்; பொய்க்குணம்நிரம்பியவர்; வஞ்சகர்; பொறுமை மிக்கவர்.

பாண்டவர்களுள் மூத்தவர் தருமர் என்னும் பெயரினர். கௌரவர்களுள் மூத்தவன் துரியோதனன் என்னும்பெயரினன். இவ்விருவருள்ளும் மூத்தவர் தருமர். இவரே அரசாதற்குரியவர்

இங்ஙனமாக, துரியோதனன் பெருமைமேலீட்டால் பாண்டவர்களுக்குப் பலவகைத் தொல்லைகளைச் செய்தான்; நாட்டை விட்டுக் காட்டிற்குஓட்டினன்; இருத்தற்கு ஐந்துவீடுகளும்கூடக் கொடுக்கமுடியாது என்று சொன்னன். மிக்க வன்மையிருந்தும் பலவான்களான ஸஹோதரர்கள் இருந்தும் தருமர் செய்தது யாது? துரியோதனன்செய்த அனைத்தையும் பொறுத்தார். ஆபத்துக்காலங்களில் அவனுக்குத் தக்க உதவிகளையும் செய்தார்.

இவ்வளவுதானே? கடைசியில் அந்த இருதிறத்தினருக்கும் சண்டைநேர்ந்தது. பொறுத்திருந்த பாண்டவர்களே வெற்றி பெற்றனர். தருமர் அரசனனர். உலகினர் தருமரது பொறுமையைப் போற்றிப் புகழ்ந்தனர்.

பொறையே பூஷணம்! பொறுத்தார் பூமியாள்வார்!!

தண்டமிழ்த்தொண்டன்.

# மங்களபுரி பிராமண சபை.

இந்த ஊர் செவ்வாய்பேட்டை அக்ரஹாரத்தில் ப்ரபவ-ஸு சித்திரை-மீ முதற்கொண்டு, "மங்களபுரி பிராமண சபை" என்னும் பேருடன், பிராமணர்களின் நித்திய கர்மாநுஷ்டானங் களை விருத்திசெய்யும் நோக்கத்துடன், ஒருசபை ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகிறது. இது, ஜகத்குரு ஸ்ரீமஹாஸன்னிதானம் சேலத் திற்கு விஜயம்செய்திருந்த காலத்தில் நடத்திய உபன்யாசங்களின் பலனேயாகும். இத்துடன் ஷை சபையின் ஆதாவில் ஒரு வேத பாடசாலையையும் ஆரம்பித்து நடத்தவேண்டுமென்று ஷை அக்ர காரவாசிகள் நன்முயற்சிசெய்து, சென்ற குருவாரத்திலிருந்து அம்மாதிரியே ஒரு பாடசாலையும் ஆரம்பம் செய்யப்பட்டிருக்கி றது. பால்யர்களும் முதியோர்களும் மிக்க உற்சாகத்துடன் வந்து சந்தை சொல்லிக்கொள்கிறார்கள். ஷை பாடசாலை இவ்வக்ரகாரத் தில் உள்ள ஸ்ரீ ஹரிஹரதேவாலயத்தில் நடக்கிறது. உபாத்யாய ரும் நிறைந்த சிரத்தையுள்ளவராக இருக்கிறார். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கும் மற்ற வியாபாரம் முதலிய தொழிலில் இருப் பவர்களுக்கும் சௌகர்யமாயிருக்கும்பொருட்டு தற்சமயம் காலை 4 மணிமுதல் 7 மணிவரையில் பாடசாலை நடக்கிறது.

இதற்கு ஆகும் செலவுகள் எல்லாம் அக்ரகாரவாசிகளின் மாதாந்திரச்சந்தாவைக்கொண்டுநடத்த ஏற்பாடுசெய்திருக்கிறது.

இத்தர்ம கைங்கர்யத்திற்கு, இன்னும் அதிகப்பொருள் தேவையிருப்பதால், ஆஸ்திக கனவான்களனைவரும் பொருளுதவி செய்யும்படியாகவும், இப்பாடசாலை மென்மேலும் விருத்தியடைய வேண்டுமென்கிற அனைவருடைய ஆசீர்வாதத்தையும் தாழ்மையு டன் கோருகிறேன்.

செவ்வாய்ப்பேட்டை, சேலம். } வை வாஞ்சிநாதன். மங்களபுரி பிராமண சபா காரியதரிசி.

---

## பொன்மலையில் பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்ட பகவத் கீதா உபன்யாஸத்தின் சுருக்கம்

அத். 8, சு. 14. இனி பகவான் யோகாப்பியாஸம் செய்ய முடியாதவர்கள் கடைத்தேறும்பொருட்டு மற்றுமோர் உபா ஸனுக்கிரமத்தை அருளுகிறார்.

613



ஓ அர்ஜுனு, எவன் வேறு விஷயங்களில் பற்றில்லாமல் பிரதிதினமும் யாவத்ஜீவபர்யந்தம் என்னை ஸ்மரித்துக்கொண்டிருக்கிருனே அப்படிப்பட்ட ஸ்திரமான யோகிக்கு நான் பிரயாஸையின்றி அடையத்தகுந்தவனுகிறேன். சோரநாயகனிடத்தில் அன்புள்ள நாரியின் புத்தி தனது வீட்டுக்காரியம் செய்யும்போதும் அந்த சோரநாயகனையே தியானித்திருப்பதுபோல் மனது விஷயங்களில் சென்றிருந்தாலும் என்னுடைய ஸ்மரணம் இருக்க வேண்டும். அந்த பக்தியோகிக்கு, பகவத்விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் பிரேமையினுடைய கௌரவத்தால் மனதில் பகவத்ஸ்மரணம்எப்பொழுதும் ஒரேதாரையாகஇருந்துகொண்டேயிருக்கும். அவன் நித்யயுக்தனுனபடியால் த்யானத்தின்வியோகத்தைக்ஷணிகங்கூட ஸஹிக்கவேமாட்டான். நானும் அவனுடைய வியோகத்தை ஸஹிக்கமாட்டேன். அவனுக்கு பூர்ணுனுக்ரஹம் செய்வேன்.

சு. 15. இதின் பாவம் என்னவெனில், என் ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் சிரேஷ்டமான மோக்ஷத்தைபடைந்து துக்கங்களுக்கு இருப்பிடமும் அநித்யமும்நிறைந்த ஜன்மாக்களைத் திரும்பத்திரும்ப அடையமாட்டார்கள். கைவல்யத்தையடைவார்கள்.

சு. 16. ஸ்ரீ பகவான் இதையே மறுபடியும் நம்மனதில் நன்ருகப்படும்படி தெரிவிக்கிருர்.

ஹே குந்திபுத்திரா, பிரம்மலோகபர்யந்தமுள்ள ஸகல லோகங்களையும் அடைந்தவர்கள் புனராவர்த்திகள்தான். பஞ்சாக்னிகளை உபாஸனம் செய்கிறவர்கள் பிரம்மலோகப் பிராப்தியை அடைகிருர்கள். ஆனுல் அவர்கள் புனராவர்த்திகளாகையால் திரும்ப ஜன்மம் எடுக்கவேண்டியவர்கள்தான் அப்படியன்னியில் ஸகுணப்பிரம்மதியானத்தால் பிரம்மலோகப்பிராப்தியையடைந்த தத்கிருதுக்கள் எப்பொழுதும் பகவானையே உபாஸித்துக்கொண்டிருப்பவர்களாகையால் அங்கேயிருந்து ஸகல போகங்களையும் அனுபவித்துக் கடைசியில் பிரம்மாவோடுகூட கைவல்யக் கிரமமுக்தியையடைகிருர்கள். அவர்களுக்குப்புனர்ஜன்மமேகிடையா.

சு. 17. பிரம்மாவுக்கு 1000 சதுர்யுகம் பகலென்றும், 1000 சதுர்யுகங்கள் இரவென்றும் எந்த ஜனங்கள் அறிவார்களோ அவர்களே காலநிர்ணயத்தைத்தெரிந்துகொண்டவர்கள் பிரும்மாவின் காலத்தைத் தெரிந்துகொண்டவர்கள் என்ருல் மனித, தேவ,

பிதுர்க்கள் முதலியவர்களின் ஆயுளையும் தெரிந்துகொண்டவர்களாகிறார்கள். காணப்படாத ஸூக்ஷ்மபிரகிருதியிலிருந்து பிரம்மா விழித்துக்கொண்டவுடன் மூன்று லோகங்களும் தோன்றுகின்றன. தூங்கும்பொழுது மூன்று லோகங்களும் அந்தப்பிரகிருதியினிடத்தில் லயத்தையடைகின்றன.

சு. 18. பிரம்மலோகமே காலத்தினால் கணக்கிடப்பட்டு கீழ்ச்சொன்ன பகல் இரவுகளைக்கொண்டு நூறுவருஷமான பிறகு நசிக்கிறதென்றால் அதற்குக் கீழுள்ள உலகங்கள் பிரம்மாவின் ஒருபகலைமாத்திரம் ஆயுளாகவுடையதினால் அவைகளுக்கு நாசம் உண்டென்பது ஸ்பஷ்டமாயிருக்கிறது என்று தெரிவிக்கிறார்.

ஸகலமான தேகேந்திரிய வியக்திகள் பிரம்மாவின் தூக்கமெனும் அவஸ்தையிலிருந்து பிரம்மாவின் பகலில் வெளியாகின்றன. அவருடைய ராத்திரிகாலத்தில் தூங்குகின்ற சதுர்முகப் பிரம்மாவினிடத்திலேயே அடைகின்றன.

சு. 19. லயம்தான் நமக்கு எப்பொழுதும் ஸர்வஸித்தமாக இருக்கிறதே, நாம் ஏன் மோக்ஷமடைய பிரயத்தினம் செய்ய வேண்டுமெனில், லயத்தையடைந்து 1000 சதுர்யுகமானவுடன் மறுபடியும் ஸூக்ஷ்மமான அவ்யக்தத்திலிருந்து ஜீவர்கள் சிருஷ்டிக்கப்படுகிறார்கள். அப்பொழுது ஜனனமரணதுக்கத்தில் ஆழ்ந்துபோகவேண்டியிருக்கிறது. ஆகையால் முக்திக்குப் பிரவிர்த்தியில்லை. பகவானை ஸ்மரித்தால்தான் முக்தியுண்டு. இதற்காகத் தான் பகவான் "भूत्वा" "भूत्वा" "ஹ-ிகவா" "ஹ-ிகவா" என்றார். அடிக்கடி பிறந்து இறந்து என்பதால் வைராக்கியம் வரவேண்டுமென்றும் நித்யச்ரேயஸ்ஸாகிய மோக்ஷத்தையடைய அவலம்பிக்கவேண்டுமென்றும் ஏற்படுகிறது.

சு. 20. பிரகிருதி(அவ்யக்தமாகிய மாயை)யைக் காட்டிலும் வேறானதாய் அநாதியாயும், அவ்யக்தமாயும், நித்யஸித்தனாயும் ஹிரண்யகர்ப்பனையும்விட அவனுக்கும் அதிஷ்டானமாகவும்தெரிந்தும் தெரியாததுபோலுமிருக்கும் பகவத்ஸ்வரூபந்தான்நித்யம். எதையடைந்தால் திரும்பி வரமாட்டார்களோ அதுதான் என் ஸ்வரூபம். அந்தப்பிரம்மம் ஸகலப்பிரபஞ்சங்களும் நாசமடைந்த போதிலும் நாசமடைகிறதில்லை.

சு. 21. இந்த அத்யாய ஆரம்பத்திலிருந்து இதுவரையில் சொல்லப்பட்டவையெல்லாம் ஸ்ரீபகவானின் ஸ்வரூபமென்றும்

அந்த ஸ்வரூபத்தையடைய மூன்றுவித உபாஸனங்களும் சொல்லப்பட்டன. எவர் காணப்படாதவரென்றும் நாசரஹிதரென்றும் லோகத்தில் சொல்லப்படுகிறாரோ அவரைப் பரமபுருஷார்த்தமாக வேதங்கள் சொல்லுகின்றன. எதையடைந்து மறுபடியும் ஜனனமடைகிறதில்லையோ அந்த உத்தமஸ்வரூபம் நான்.

சு. 22. எவனுடைய ஸ்வரூபத்திற்குள்ளே ஸகல பிராணிகளும் அடங்கியிருக்கின்றனவோ எவன்ஸகலமாயும்வியாபித்திருக்கிறானோ அப்படிப்பட்ட புருஷன் வேறு நினைவில்லாத பக்தியால் (ஞானத்தால்) அடையக்கூடியவன்.

சு. 23. எந்தக்காலத்தில் தேகத்தைவிட்டுப்போகிற யோகிகள் அதாவது உபாஸகர்களும் கர்மிகளும் புனர்ஜன்மத்தையடையார்களோ எந்தகாலத்தில் போகிறவர்கள் அடைவார்களோ அந்தகாலத்தைச் சொல்லுகிறேன் கேள்.

சு. 24. அக்னிக்கும் தேஜஸ்ஸுக்கும் பகலுக்கும் சுக்லபக்ஷத்திற்கும் உத்தராயணத்திற்கும் அபிமானதேவதைகளின் வழியாகச் செல்லும் ஞானிகள் பரப்பிரம்மத்தைக் கிரமமாக அடைகிறார்கள். முந்தின சுலோகத்தில் காலத்தைச் சொல்லுகிறேனென்று இங்கு தேவதைகளையும் சொல்லியிருப்பதால் காலங்களைப்பற்றி அதிகமாகச் சொல்லப்போகிறாரென்றும் அதைத் தவிர வேறு சிலதும் சொல்லுகிறார் என்றும் கொள்ளவேண்டும்.

சு. 25. மேற்சொன்ன மார்க்கத்திற்கு கௌரவம் அதிகம் ஏற்படும்பொருட்டுத் திரும்பிவருகிற மார்க்கத்தைக்கூடசொல்லுகிறார். புகைக்கும் இரவுக்கும் கிருஷ்ணபக்ஷத்திற்கும் தக்ஷிணாயனத்திற்கும் அபிமானிதேவதைகளின் லோகங்களின்வழியாகச் செல்லும் காம்யகர்மயோகிகள் சந்திரலோகம்போய் திவ்யசரீரங்களையடைந்து தேவர்களுக்குப் போக்யமாகவிருந்து பிறகு ஜன்மத்தையடைகிறார்கள். தேவதைகளுக்கு போக்யமாகவிருப்பது சிரமமன்றோவெனில் சிரமந்தான். இருந்தாலும் இவர்களுக்கும் சௌக்கியம் உண்டு. பத்னிபுத்திரர்கள் நமக்கு போக்யவஸ்துவாயிருந்தாலும் அவர்களுக்கும் சுகமிருப்பதுபோல்தான். இவ்விருவித கர்மங்களையும் அநுஷ்டியாதவர்கள் கிருமி புழு முதலிய ஜந்துக்களாக ஒரு நாளில் அநேக ஜன்மங்களை எடுத்துக்கொண்டு இவ்வுலகத்திலேயே உழன்றுவருகிறார்கள். நிர்குணப்பிரம்மத்தைத் தியானம்பண்ணும் ஜீவன் முக்தர்களோ வெளியே எங்கும்

போகாமல் இவ்விடத்திலேயே பாவி எல்லாஸ்வரூபமாகவும் ஆகி விடுகிருர்கள். ஓர் ஆசங்கைதோன்றலாம். முதலாவது சொன்ன தியானயோகி தக்ஷிணாயனத்தில் இறந்தால் நல்லகதி கிடைக்காதா? அவன் திரும்பியும் பிறக்கவேண்டியதுதானுவெனில், அவனுக்கு நற்கதியுண்டு. மறுபடியும் ஜனனமேற்படாது. எனெனில் தக்ஷிணாயனமாகவிருந்தாலும் உத்தராயணத்தின் அபிமானிதேவதைகள் எப்பொழுதும் அந்தபக்தனை அழைத்துப்போகக் கார்த்துக்கொண்டேயிருக்கிருர்கள். ஆனல் பீஷ்மர் உத்தராயணத்திற்குக் கார்த்துக்கொண்டு ஏன் இருந்தார் என்ருல் பிதாகொடுத்த வரத்தை உபயோகப்படுத்துவது உலகத்திற்கு உத்தராயணத்தின் மஹிமையைத் தெரிவிப்பது, தர்மபுத்திரருக்கு தர்மோபதேசம் செய்வது முதலிய கார்யங்களை நிறைவேற்றத்தான் கார்த்துக் கொண்டிருந்தார்.

சு. 26. ஓ குந்திபுத்திரா அர்ச்சிராதி தூமாதி என்கிற இவ் விருமார்க்கங்களும் ஜகத் ஏற்பட்டதுமுதல் இருக்கின்றன. அதாவது அனாதியாக உள்ளன. அர்ச்சிராதிமார்க்கம் சுக்லமென்றும் தூமாதிமார்க்கம் கிருஷ்ணமார்க்கமென்றும் சொல்லப்படும். இவைகளில் சுக்லமார்க்கத்தால் போகிறவன் திரும்பி பிறக்காமல் கிரமமுக்தியையடைவான். கிருஷ்ணமார்க்கத்தில் போகிறவன் போகத்தின்முடிவில் திரும்பிப் பிறக்கவேண்டியதாகும்.

சு. 27. இதுவரையிலும் சொல்லப்பட்ட ஞானத்தின் பிரசம்சையுடன் அத்யாயார்த்தத்தை உபஸம்ஹரிக்கிருர். இந்த மார்க்கங்களை அறிந்திருக்கிறயோகி திரும்பவாமலிருக்கும் மார்க்கத்தின்வழியாகப் போகப் பிரயத்தினம் செய்வான். அக்ஞானத்தையடைகிறதில்லை. ஆகையால நீ புனர்ஜன்மத்தைக் கொடுக்கும் காம்யகர்மத்தைச் செய்யாதே.

சு. 28. இந்த அத்யாயத்தில் சொல்லப்பட்ட பக்தியோக ரஹஸ்யத்தை அறிந்து அவ்விதமே நன்று பரமாத்மபக்தியோகத்தையனுஷ்டித்தவன், வேதங்களிலும் யக்ஞங்களிலும் தபஸ்களிலும் தானங்களிலும் எந்த புண்ணியபலன் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த எல்லா பலன்களைக் காட்டிலும் அதிக்கிரமிக்கிருன். அதாவது பிரம்மசார்யம்முதலான ஸாதனங்களினுலடையக்கூடாத அதற்கு மேற்பட்ட ஸகுணப் பிரம்மப்பிராப்தி என்னும் உத்தம பலத்தையடைகிருன். பின்னும பிரம்மலோகத்திலேயே பிரம்ம ஸாக்ஷாத்காரமுள்ளவனுகி பிரம்மஸ்வரூபானந்தம என்னும் கைவல்யத்தை அடைகிருன். 8-வது அத்யாயம் முற்றிற்று.

(தொடரும்) வி. என். ராமனுதன்.